# பெண்ணியத்தின் வளர்ச்சியில் டெரிடாவின் கட்டவிழ்ப்புவாதத்தின் செல்வாக்கு

டக்ஷிகா.ப, நிரோசன்.சி.
மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
*dakshivox@gmail.com*

கட்டவிழ்ப்புக் கோட்பாடு பின் நவீனத்துவச் சிந்தனைகளுள் முதன்மைபெற்று விளங்குகிறது. அந்தவகையில் கட்டவிழ்ப்புக் கோட்பாட்டினை ஆதாரமாகக்கொண்டு பெண்களுக்கான உரிமைகள் மற்றும் சமத்துவத்தின் முக்கியத்துவத்தை ஆராய்வதாகவும், கட்டவிழ்ப்புக் கோட்பாட்டையும் பெண்ணியச் சிந்தனைகளையும் விமர்சன ரீதியாகப் பகுப்பாய்வு செய்வதாகவும் இந்த ஆய்வுக் கட்டுரை அமைகின்றது. விளிம்புநிலையில் உள்ள விடயங்களும் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தைக் கட்டவிழ்ப்புவாதம் வலியுறுத்தியது. இது பல அறிஞர்கள் ஓரங்கட்டப்பட்ட விடயங்களின்பால் தங்களின் கவனத்தைச் செலுத்துவதற்கு வித்திட்டது. அவ்வாறே பெண்ணியச் சிந்தனைகள் ஏன் ஓரம் கட்டப்பட்டன என்பதற்கான காரணங்களையும் கட்டவிழ்ப்புவாதம் முன்வைத்தது. அந்தவகையில் கட்டவிழ்ப்புக் கோட்பாடு பெண்ணியச் சிந்தனைகளில் ஏற்படுத்திய மாற்றங்களையும் அதன் பிற்பட்ட வளர்ச்சியையும் பகுப்பாய்வு செய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும். ஆரம்பகால சமூகத்தில் பழைய மரபுகளின் அடிப்படையில் பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகள், சமத்துவமின்மை என்பன நிகழ்ந்த வண்ணம் இருந்தன. இவற்றை எதிர்த்து பெண்களும் தங்களுக்கான உரிமைகளைப் பெறவேண்டும் என பெண்ணிய இயக்கங்கள் தோற்றம்பெற்றன. தொடர்ச்சியாக கட்டவிழ்ப்புக் கோட்பாட்டின் வருகையானது பெண்ணியச் சிந்தனைகள் மேலும் வலுப்பெறுவதற்கு வழிவகுத்தது. கல்வி, விளையாட்டு, அரசியல் போன்ற பல்வேறு துறைகளிலும் பெண்கள் தமது சாதனைகளை மேற்கொள்ளத் தடையாக இருந்த சமூக, கலாசார, ஆணாதிக்கக் கட்டுக்களிலிருந்து அவர்கள் தம்மை விடுவித்துக் கொள்ளவேண்டியதன் அவசியத்தைக் கட்டவிழ்ப்புக் கோட்பாடு தெளிவுபடுத்திநின்றது. ஆணாதிக்க நிலை, சமத்துவமின்மை, சமூக கலாச்சார மரபுகள் என்பன மீள்வாசிப்புக்குட்படுத்தப்பட்டுப் பெண்ணியச் சிந்தனைகள் முதன்மைப்படுத்தப்பட்டன. இதனால் பெண்ணியச் சிந்தனைகள் புதியதொரு பரிணாமத்தில் வளர்ச்சியடையத் தொடங்கியது. டெரிடாவின் கட்டவிழ்ப்புக் கோட்பாடு பெண்களுக்கு இருந்த கட்டுப்பாடுகளில் இருந்து அவர்களை வெளிக்கொணர்ந்தது. பெண்ணானவள் கல்வி, விளையாட்டு, அரசியல் போன்ற துறைகளில் சாதனை புரிவதற்கு அவர்களுக்குத் தடையாக இருந்த பாரம்பரிய சிந்தனை முறைகளில் புரட்சிகரமான மாற்றங்களை உண்டுபண்ணியது. இருப்பினும் கட்டவிழ்ப்புக் கோட்பாட்டிற்கு எதிராகவும், அதன்வழி புத்துருவாக்கம் பெற்ற பெண்ணியச் சிந்தனைகளுக்கு எதிராகவும் விமர்சனங்கள் எழவே செய்தன. எத்தகைய விமர்சனங்கள் எழுந்தாலும், கட்டவிழ்ப்புக் கோட்பாடு பெண்ணியச் சிந்தனைகளின் வளர்ச்சியில் பாரிய செல்வாக்கினைச் செலுத்தியுள்ளது என்பது மறுதலிக்கமுடியாத உண்மையாகும். இந்த ஆய்வுக் கட்டுரையானது விபரண முறை, உள்ளடக்கப் பகுப்பாய்வு முறை, விமர்சன முறையியல் என்பவற்றின் துணைகொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. இந்த ஆய்வுக்குரிய தரவுகள் கட்டவிழ்ப்புக் கோட்பாடு மற்றும் பெண்ணியச் சிந்தனைகள் தொடர்பாக வெளிவந்த நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், இணையத்தளப் பதிவுகள் என்பனவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** *பின் நவீனத்துவம், பாலின சமத்துவம், சமூகமாற்றம், ஆணாதிக்கம், கட்டுக்களிலிருந்து விடுபடல்*



CamScanner